சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்துமாறு இந்திய அரசைக் கேட்கும் படியும் குழு பரிவுரை செய்துள்ளது. இப்பரிவுரைகளை அரசு முழுமூரமாக ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மூடப்பட்ட ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்யவும், ஆலைகள் மேற் கொண்டும் மூடப்படுவதைத் தடுக்கவும், தேவையுள்ள பொருத்தமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது என்பதையும், அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும் மேற்கூறியவற்றி லிருந்து அறியலாம்.

(இ) நூல்வரி ஏற்றமும், பஞ்சாலைத் தொழிலாளர் அல்லலும்

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அண்மையில் மத்திய சர்க்கார் 60, 80, 100-ஆம் நம்பர் நூல்களின்மீது ஒரு கிலோ நூலுக்கு ரூ. 1.20 என்றிருந்த வரியை ரூ. 6.20 ஆக உயர்த்தியதால் தமிழகத்தில் உள்ள பஞ்சாலைத் தொழிலும் அதில் பணியாற்றுகின்ற 1,00,000 தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் பாதிக்கப் பட்டிருப்பதைப்பற்றி அவசரமும், முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உற்பத்திச் செலவு அதிகரிப்பு, மின்சார வெட்டு, நியாயமான விலைகளில் பஞ்சு கிடைக்காமை, ஏனைய மூலப் பொருள்களின் உயர்விலைகள், கைத்தறித் தொழிலும் பரவலாக அமைக்கப்பட்ட ஏனைய துறைகளும் குறைந்த அளவுக்கு நூல் பயன்படுத்தியது போன்ற பல்வேறு காரணங்களால் தமிழகத்திலுள்ள துணி ஆலைகள் முக்கியமாக நூற்பாலைகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக நெருக்கடியான ஒரு நிலையில் செயல்பட வேண்டி வந்தது. இத்தகையதொரு நெருக்கடி நிலைமையின் காரணமாக, சில ஆலைகள் ஏற்கெனவே மூடப்பட்டு விட்டன. இன்னும் பல ஆலைகள் மூடப்படும் நிலையில் உள்ளன. மூடிய ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்யவும், ஆலைகள் மேற்கொண்டும் மூடப்படாமல் தடுக்கவும், மாநில அரசு உத்தரவாத உதவி வழங்குவதன் மூலம் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கச்சாப் பருத்தியின் விலையும் தயாரிப்புச் செலவு களும் உயர்ந்தமையாலும் தொழிலாளர் ஊதியங்களும் பருத்தியின் மீதான ஆயத்தீர்வை வீதங்களும் அதிகரித்தமையாலும், கடந்த பன்னி ரண்டு மாதங்களில் பருத்தி நூலின் விலைகள் உயர்ந்து கொண்டே போயின. 1967–68-ல் இந்திய அரசு வரவு–செலவுத் திட்டத்தில் கண்டு நூல் (Cone yarn) பாவு நூல் (s zed yarn) ஆகியவற்றிற்கான ஆயத் தீர்வைகள் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்படுமென அறிவிக்கப்பட்டுள் ளது.

பாவு நூல்.	வரவு–செலவுத் திட்டத்திற்கு முந்திய வீதங்கள்.	வரவு–செலவுத் திட்டத்திற்கு பிந்திய வீதங்கள்.
(1)	(2)	(3)
	(கிலோகிராம்ஒன்றுக்கு	காசுக் கணக்கில்)
Nf. 51 அல்லது அதற்கு மேற்பட்டு	150	620
Nf. 40 லிருந்து 50 வரை ..	120	620
Nf. 34 லிருந்து 39 வரை ..	90	240
Nf. 29 லிருந்து 33 வரை ..	60	240
கண்டு நூல்—		
Nf. 29 லிருந்து 33 வரை ..	50	70

தற்போதைய அதிகரிப்பின் விளைவாக மொத்த உற்பத்திச் செலவில் சுமார் 60 சதவிகிதம் தீர்வையாகச் செலுத்தப்படவேண்டிவரும். நூலுக் குக் கஞ்சி போடும் தொழிற்சாலைகள் (sinzig factories)

செலுத்தத் தக்க புதிய தீர்வை வீதம் Nf. 40, அதற்கு மேற்பட்ட எண்ணுள்ள, 100 கிலோ கிராம் நூல் கொண்ட பெட்டி ஒவ்வொன்றுக்கும் ரூ. 510 ஆகும்.

வரவு–செலவுத் திட்டத்திற்கு முன்பு இத்தகைய பெட்டி ஒன்றுக்கு செலுத்தத்தக்க தீர்வை வீதம் ரூ. 20 ஆக இருந்தது. நூலுக்குக் கஞ்சி போடும் தொழிற்சாலை இயந்திரம் ஒன்றுக்காக இந்த உயர்ந்த வீதத்தில் ஒரு நாளுக்கு 5,000 ரூபாய் செலுத்த வேண்டி வரும் எனத் தெரிகிறது. தொழிற்சாலையின் மூலதனம் பல இடங்களில் 50,000 ரூபாய்க்கு மேற்படாமல் இருக்கையில் மேற்கூறியபடி அதிகமான தொகையை அத் தொழிற் சாலைகள் தீர்வையாகச் செலுத்த வேண்டி வரும். விதிக்க எண்ணியுள்ள தீர்வை முழுவதையும் செலுத்திவிட்டு ஆதாயத்திலும் இயங்குவது என்பது இயலாத செயல். 1967–68 மத்திய வரவு–செலவுத் திட்டத்தில் கண்டு நூலுக்காகவும் பாவு நூலுக்காகவும் அதிகத் தீர்வை வீதங்கள் விதிக்கப்பட்டதன் விளைவாக, இம் மாநிலத்தில் துணி ஆலைத் தொழில் மிகுந்த அளவுக்குப் பாதிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. இம் மாநிலத்திலுள்ள நூற்பாலைகள் மூலமே விசைத் தறிகளுக்கு நூல் பெருமளவிற்குக் கிடைக்கின்றது. நூல் மீதான தற்போதைய ஆயத் தீர்வை வீதங்களை உயர்த்தாமல் தற்போதுள்ள வீதங்களையே தொடர்ந்து செயலில் இருக்கும்படிச் செய்யுமாறு அமைச்சர் அளவில் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் துணி ஆலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள மந்த நிலைமையையும் எத்தகைய இடர்ப்பாடுகளில் அத் தொழில் செயல்பட்டு வருகின்றது என்பதையும் குறிப்பாகக் கருதிப் பார்த்து, ஆயத்தீர்வை வீதங்களை உயர்த்தாமல் இருக்கும்படி இந்திய அரசை நான் கேட்டுக்கொண்டுள்ளேன். நான் மத்திய நிதி அமைச்சரைச் சந்தித்து, நூலின் மீதான ஆயத் தீர்வையைக் குறைக்கும்படிக் கேட்டுக் கொண்டதற்கு, குழு ஒன்று இது பற்றிப் பரிசீலிப்பதற்காக ஏற்படுத்தப் பட்டிருப்பதாகவும், அக் குழு இதைப் பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்கு மென்றும், அதையொட்டி தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

(உ) வெளியில் அரிசி விற்பனைத் தடையால் கோவை நகரிலும் சுற்றுப்புறங்களிலும் மக்கள் அல்லல்.

THIRU R. KRISHNASWAMY GOUNDER: Sir, I call the attention of the Hon. Minister for Food to a matter of urgent public importance, namely, the hardship of thousands of poor workers in and around Coimbatore City on account of the recent order of the Government completely prohibiting the sale of rice in the open market.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, I may be permitted to make the following statement :—

The scales of supply of ration in the statutorily rationed area of Coimbatore since the commencement of this year are as follows :—

From.	To	Rice. (IN GRAMMES)	Wheat. (IN GRAMMES)
(1)	(2)	(3)	(4)
11th December 1966.	28th January 1967.	1,200	800 (full)
29th January 1967.	4th February 1967.	800	800
12th February 1967.	25th February 1967	1,200	400